செய்தி வெளியீடு எண்:401 நாள்:08.07.2021

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (8.7.2021) மாண்புமிகு ஒன்றிய மீன்வளம், கால்நடை மற்றும் பால்வளத்துறை மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சராக புதிதாக பொறுப்பேற்றுக் கொண்ட பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் திரு. எல். முருகன் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படும் வகையில் உங்களது பணி அமைய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வாழ்த்துக்கு நன்றி தெரிவித்த மாண்புமிகு ஒன்றிய இணை அமைச்சர் திரு.எல். முருகன் அவர்கள், தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் நல்குவதாகத் தெரிவித்தார்.

••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9